எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) இதற்கு மேலே நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) முதலிலே உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். சபைத் தலைவரிடம் வந்து பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அவைத் தலைவரிடம் வந்து பேசுவது முறையல்ல. நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களை நான் எச்சரிக்கிறேன். உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நான் பொறுமையாக இருக்கமுடியாது. (குறுக்கீடுகள்) அவையை நடத்த வேண்டும். நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) பலமுறை எச்சரித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையை நடத்த விடாமல், அவைக்கு குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால், அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல் குழப்பம்) கூச்சல்-குழப்பம் இல்லாமல் வெளியேற்றுங்கள். எல்லோரையும் வெளியேற்றுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

முற்பகல் 11–45

3. அறிவிப்புகள்–*தொடர்ச்சி*

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 14–7–2014 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 5–8–2014 அன்று பிற்பகல் மற்றும் 6–8–2014 ஆகிய நாட்களிலும், 6–8–2014 அன்று எடுத்துக் கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 22–7–2014 அன்றும், 22–7–2014 அன்று எடுத்துக் கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை 14–7–2014 அன்றும், 21–7–2014 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகளில், மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை 8–8–2014 அன்றும் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக் கொள்ளப்பெறும். (குறுக்கீடு)